நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper   பக்கங்கள் 06   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   Peoples Daily   மக்கள் தினசரி

நாதம் 03   திருவள்ளுவர் ஆண்டு 2023   மார்கழி 26   (10-01-1993)   ஞாயிற்றுக்கிழமை   ஓசை 327

## 96 சதவீத மக்களுக்கு மலேரியாபரவும் அபாயம்

மலேரியா நோய் அதிகரித்து வரும் நான்கு ஆசிய நாடுகளில் சிறிலங்காவும் ஒன்று என்று உலக வங்கியின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. நேப்பாளம், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகியன மற்ற மூன்று நாடுகளாகும். தெற்காசியாவில் 96 சதவிகித மக்களுக்கு மலேரியா நோய் பரவும் அபாயம் உள்ளது. சிறிலங்கா, தெற்காசிய தொகுதி நாடுகளில் ஒன்றாகும். மற்றும் கிழக்கு ஆசியாவில் 26 சத விகித [06 ஆம் பக்கம் பார்க்க]

# பூநகரியிலிருந்து ராணுவத்தை வாபஸ் பெற அரசு மறுப்பு

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெற்று யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கென கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்துவிட சிறிலங்கா அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் பிரதம மந்திரியும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா சங்குப்பிட்டி-கேரதீவுப் பாதையை திறந்துவிட அரசாங்கம் தயாராகவே உள்ளது ஆனால், பூநகரிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெற முடியாது என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் தடை செய்யப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் யாழ். கடல் நீரேரி வழியாக இரவிலோ, பகலிலோ பொது மக்கள் பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

## மீட்பு நிதி சேகரிப்பு

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறிய வசதி படைத்தோர் (சகல உதவி அரசாங்க அதிபர்பிரிவைச் சேர்ந்தவர்களும்) இன்று காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் செலுத்தலாம் என தமிழீழ மீட்பு நிதி பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

# மாபெரும் வெகுஜன போர் நாளை நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு தமிழீழ மக்கள்மீது திட்டமிட்டு மேற்கொண்டுவரும் பொருளாதாரத்தடை மற்றும் பல்வேறு அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ் குடாநாட்டில் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் மறியல் போராட்டமும் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதாரத்தடை, மற்றும் உணவு, கல்வி, சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறைசார்ந்த அடிப்படைத் தேவைகள் மீதான தடை...னும் இக் கண்டனப் பேரணியும் மறியல் போராட்டமும் நடாத்தப்படவுள்ளது.

தமிழீழத்தில் உள்ள பல்வேறு தொழிற் சங்கங்கள், பொதுநிறுவனங்கள் மக்கள் அமைப்புக்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மேற்படி போராட்டத்துக்கான ஒழுங்குகளைக் கவனித்து வருகிறது.

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் தொழிலாளர்கள், பொது மக்கள், பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள், இடம் பெயர்ந்த மக்கள், அரச தனியார்துறை ஊழியர்கள் போன்ற அனைத்து மக்களும் அணிதிரண்டு வந்து இப்பேரணியில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது இதற்காக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறன.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பேரணியில் கலந்துகொள்ள

# பயிற்சி நடவடிக்கைகளில் கொழும்பு வந்த புக்காரா

## புதிய ஹெலிகளும் விரைவில் வருமாம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசுகொள்வனவு செய்துள்ள புதிய யுத்த விமானம் கடந்த சில நாட்களாக பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகச் சிறிலங்காபாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆர்ஜென்ரீனாவில் இருந்து கொள்வனவுசெய்யப்பட்டுள்ள நான்கு யுத்த விமானங்களில் ஒன்றே கடந்தவாரம் பகுதிகளாகவிமானம்மூலம் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டு அங்குவைத்து பொருத்தப்பட்ட பின்னர் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

"புக்காரா தரைத் தாக்குதல் விமானம்" என்று அழைக்கப்படும் இவ் விமானத்தில் இரண்டு விமான ஓட்டிகள் பிரயாணம்செய்யவும், ஆயிரத்து ஐந்நூறு கிலோகிராம் எடையுள்ள குண்டுகள், ரொக்கட்டுக்கள், ஏவுகணைகள் என்பனவற்றை எடுத்துச்செல்லவும் வசதிகள் உண்டு எனவும் தெரியவருகின்றது.

இதன் விலை 1.8 மில்லியன் டொலர் எனவும், மேலும் மூன்று விமானங்கள் விரைவில் கொண்டுவரப்படும் எனவும் கூறப்படுகிறது.

இத்துடன் ரஷ்யத் தயாரிப்பான எம். ஐ - 8 ரக உலங்கு வானூர்திகளும், பீரங்கி பொருத்தப்பட்ட பிரெஞ்சுத் தயாரிப்பான அதிவேகவிசைப் படகுகளும் விரைவில் சிறிலங்காவிற்கு கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# வவுனியாப் பகுதியில் புலிகள்-படை திடீர்மோதல்

## ஷெல் வீச்சுக்கு ஒரு பொதுமகன் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டம் சிவனக்குளம்சந்தி என்னும் இடத்தில் நேற்று சிறிலங்கா இராணுவத்திற்கும் - புலிகளுக்கும் இடையில்திடீர்மோதல் ஒன்று ஏற்பட்டது. காலை 7.10மணியளவில்இவ் இடத்தால்சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல் நடாத்தியபோதே இத்திடீர்மோதல் ஏற்பட்டது. இம்மோதலில்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பகிரங்க விவாதத்திற்கான

# பிரேமாவின் அழைப்பை சிறிமாவோ ஏற்றார்

நிதி பொறுப்பாளர் வெற்றியரசன் தெரிவித்துள்ளார்.

(கொழும்பு)

**பூநகரிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெற்று யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கென கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்துவிட சிறிலங்கா அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.**

சிறிலங்காவின் பிரதம மந்திரியும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா சங்குப்பிட்டி-கேரதீவுப் பாதையை திறந்துவிட அரசாங்கம் தயாராகவே உள்ளது ஆனால், பூநகரிப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெற முடியாது என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் தடை செய்யப்பட்ட வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் யாழ். கடல் நீரேரி வழியாக இரவிலோ, பகலிலோ பொது மக்கள் பயணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# மாபெரும் வெகுஜன போர் நாளை நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு தமிழீழ மக்கள்மீது திட்டமிட்டு மேற்கொண்டுவரும் பொருளாதாரத்தடை மற்றும் பல்வேறு அடக்குமுறை நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ் குடாநாட்டில் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் மறியல் போராட்டமும் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா அரசினால் தமிழ் மக்கள் மீது கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்டுவரும் பொருளாதாரத்தடை, மற்றும் உணவு, கல்வி, சுகாதாரம், மருத்துவம் ஆகிய துறைசார்ந்த அடிப்படைத் தேவைகள் மீதான தடை, சிறிலங்கா அரசின் ஆயுதப் படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்கள், அடக்குமுறைகள், அட்டூழியங்கள் ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்தும், சிறிலங்கா அரசின் மேற்படி காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தும் நோக்குடனும் இக் கண்டனப் பேரணியும் மறியல் போராட்டமும் நடாத்தப்படவுள்ளது.

தமிழீழத்தில் உள்ள பல்வேறு தொழிற் சங்கங்கள், பொதுநிறுவனங்கள் மக்கள் அமைப்புக்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் மேற்படி போராட்டத்துக்கான ஒழுங்குகளைக் கவனித்து வருகிறது.

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் தொழிலாளர்கள், பொது மக்கள், பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள், இடம் பெயர்ந்த மக்கள், அரச தனியார்துறை ஊழியர்கள் போன்ற அனைத்து மக்களும் அணிதிரண்டு வந்து இப்பேரணியில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது இதற்காக குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறன.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பேரணியில் கலந்துகொள்ள ஆசிரியர்களுக்கு அழைப்பு

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள்மீது ஏற்படுத்தும் பொருளாதாரத் தடை கல்வித் தேவைகளையும் பாதிக்கின்றது எனவே கல்விச் சமூகத்தினராகிய நாங்கள் எமது எதிர்ப்பை அரசிற்குத் தெரிவிப்பது தமிழ் மாணவர்களின் கல்விக்கு நாம் செய்யும் பாரிய உதவியாகும். இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தெரிவித்தார் நாளை நடைபெறும் கண்டன ஊர்வலத்தில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# 'சார்க்' மாநாட்டிற்கு ராவ் செல்லமுடியாத நிலை

## டாக்கா மாநாடு ஒத்திவைப்பு

(டாக்கா)

டாக்கா நகரில் அடுத்த வாரம் புதன்கிழமை நடக்கவிருந்த தெற்கு ஆசிய நாடுகளின் அமைப்பான சார்க் உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சார்க் மாநாடு கூடும் அடுத்த திகதி பற்றிய அறிவித்தல் எதுவும் இல்லாமலேயே மாநாடு பிற்போடப்பட்டுள்ளது.

சார்க் மாநாடு ஒரு நாள் நடைபெற இருந்தது.

அயோத்தி நகரில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டது தொடர்பாக ஆத்திர மடைந்திருக்கும் சுமார் பன்னிரண்டு பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் பிரதமர் நரசிம்மராவ் அடுத்த வாரம் டாக்கா நகர் வரும் போது விமானநிலையத்தைச் சுற்றி முற்றுகையிட்டு அவரது பயணத்தைக் குழப்பப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சார்க் மாநாட்டில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அறிவித்துள்ளார்.

''சார்க்'' அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற முறையில் இத்தகவல் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# பயிற்சி நடவடிக்கைகளில் கொழும்பு வந்த புக்காரா

## புதிய ஹெலிகளும் விரைவில் வருமாம்

(கொழும்பு)

சிறிலங்கா அரசு கொள்வனவு செய்துள்ள புதிய யுத்த விமானம் கடந்த சில நாட்களாக பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆர்ஜென்ரீனாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள நான்கு யுத்த விமானங்களில் ஒன்றே கடந்தவாரம் பகுதிகளாக விமானம்மூலம் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டு அங்குவைத்து பொருத்தப்பட்ட பின்னர் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

''புக்காரா தரைத் தாக்குதல் விமானம்'' என்று அழைக்கப்படும் இவ் விமானத்தில் இரண்டு விமான ஓட்டிகள் பிரயாணம்செய்யவும், ஆயிரத்து ஐந்நூறு கிலோகிராம் எடையுள்ள குண்டுகள். ரொக்கட்டுக்கள், ஏவுகணைகள் என்பனவற்றை எடுத்துச்செல்லவும் வசதிகள் உண்டு எனவும் தெரியவருகின்றது.

இதன் விலை 1.8 மில்லியன் டொலர் எனவும், மேலும் மூன்று விமானங்கள் விரைவில் கொண்டுவரப்படும் எனவும் கூறப்படுகிறது.

அத்துடன் ரஷ்யத் தயாரிப்பான எம். ஐ - 8 ரக உலங்கு வானூர்திகளும், பீரங்கி பொருத்தப்பட்ட பிரெஞ்சுத் தயாரிப்பான அதிவேகவிசைப் படகுகளும் விரைவில் சிறிலங்காவிற்கு கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## வவுனியாப் பகுதியில் புலிகள்-படை திடீர்மோதல்

### ஷெல் வீச்சுக்கு ஒரு பொதுமகன் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டம் சிடைக்குளம்சந்தி என்னும் இடத்தில் நேற்று சிறிலங்கா இராணுவத்திற்கும் - புலிகளுக்கும் இடையில் திடீர்மோதல் ஒன்று ஏற்பட்டது. காலை 7.10மணியளவில் இவ் இடத்தால்சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல் நடாத்தியபோதே இத்திடீர்மோதல் ஏற்பட்டது. இம்மோதலில்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

பகிரங்க விவாதத்திற்கான

# பிரேமாவின் அழைப்பை சிறிமாவோ ஏற்றார்

[லண்டன்]

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவை பகிரங்க மேடைக்கு அழைத்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதியின் சவாலை ஏற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1994 ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் பொதுத் தேர்தல் என்று ஜனாதிபதி அறிவித்திருந்த போதிலும் அரசின் பொருளாதாரக்கொள்கைக்கு எதிராய் கண்டனக் குரல்கள் எதிர்க்கட்சிகள் தரப்பில் எழுந்துள்ளன.

நூற்றுக் கணக்கில் ஆடைத் தொழிற்சாலைகள் தொடங்கி பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் வழங்கப்படும் என்ற ஜனாதி

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## இன்று உரையாற்றுவார்

[யாழ்ப்பாணம்]

தெற்காசிய தேசிய கிறிஸ்தவ மன்றச் செயலாளர் அருட் கலாநிதி ரியன்ஸி பெரேரா இன்று பி.ப. 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத்தெரு நற்சமூக நடு நிலையத்தில் ''இன்றைய நிலையில் சமயங்கள்-தெற்கிலிருந்து ஒரு நோக்கு'' என்னும் பொருள் பற்றி உரையாற்றவுள்ளார். உரை ஆங்கிலத்தில் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## திருச்சபைகளின் ஆயர்கள் நேற்று சந்திப்பு

தற்போது யாழ். வருகை தந்துள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி வண. ஜேர்ஜ் கென்னத் பெர்னாண்டோ நேற்றுக்காலை யாழ். கத்தோலிக்க திருச்சபை ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை

[ 6 ஆம் பக்கம் பார்க்க ]

## பரீட்சை விடைத்தாள்கள் கப்பலிலேயே உள்ளன

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தை நேற்றுகாலை வந்தடைந்த 'குமண' கப்பலில் யாழ். மாவட்டத்தில் நடந்து முடிந்த க பொ. த. (சா/த) பரீட்சை விடைத்தாள்கள் இன்னமும் உள்ளன.

கடந்த வாரம் இக்கப்பலில் விடைத்தாள்களும், தபால் பொதிகளும் அனுப்பி வைக்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

ராஜீவை கொன்ற குண்டு

## அமெரிக்க தொழில்நுட்ப அடிப்படையில் தயாரானது

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்ய பயன்படுத்திய வெடிகுண்டு அமெரிக்க தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டதென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்

### மிருதங்கம்

நீங்கள் விரும்பும் அளவுக் கேற்ப புதிய மிருதங்கம் குறித்த தவணையில் ஓடருக்கு செய்து தரப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார். மிருதங்க தொழில் நிலையம், 192/1 நாவலர்வீதி — பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (3927)

### மலிவு விற்பனை

அழகிய கலண்டர்கள் பல திணிசுகளில் விற்பனைக்குண்டு வர்ணக் கலர்களில் பதிப்பித்தும் பெற்றுக் கொள்ளலாம். படங்கள் தனியாகவும், சிலிப் தனியாகவும். ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 330, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். (3921)

### புதிய உலகம்

"புதிய உலகம்" வெளிவந்து விட்டது. இருமாத சமூக சஞ்சிகை பிரதி 15/- ஆண்டுக்கு 70/- இடம் பெயர்ந்த சந்தாதாரர்கள் தொடர்பு கொள்ளவும் 115 நான்காம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சி-5739)

### தவறிவிட்டது

07-01-93 அன்று பிலிப்ஸ் நேர்சிங் ஹோம் — பஸ்ரியன் அச்சகத்திற்கு மிடையில் ஒரு மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3968)

### புலமைப்பரிசில்வகுப்பு (ஆண்டு 5)

தாரஇட மாணவர்களின் வசதி கருதி சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் வாராந்த வகுப்புக்கள் (week end class) ஆரம்பமாகின்றன. அநுமதிக்கு முந்துங்கள். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3963)

### விற்பனைக்குண்டு

இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு தொடர்பு: 698/15 தலையாழி சபாபதி வீதி. (வைரவர் கோவிலடி), யாழ்ப்பாணம். (3967)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். இணை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5679)

### வியாபாரிகட்கு

உள்நாட்டு வெளிநாட்டு அழகு சாதன பொருள்களும், லேஸ், தையல் பொருள்கள், எவர் சில்வர், ஸ்கூல் ரவலிங், கான்பாக், இமிரேசன் சுவரிங் நகைகள் விளையாட்டுப்பொருள்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ள, ஜெயா அழகு சாதன மாளிகை 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3954)

### SEMINAR (IN ENGLISH)

TALK by REV. Dr- RIENZIE PERERA of the Anglican Church, Colombo

TOPIC: Religions in the Current situation a view from the south at the centre for Better Society.

115, 4th cross Street, Jaffna.
to day Sunday) at 3.30p.m
ALL ARE WELCOME
(3963)

## மாபெரும் எழுச்சிப் பேரணி

சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையை எதிர்த்தும் நான்கு அம்சக் கோரிக்கையை முன் வைத்தும், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால், 11-01-93 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லூரில் இருந்து யாழ் செயலகம் வரை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்ட எழுச்சிப் பேரணியில், யாழ். மாவட்டத் தச்சுத்தொழிலாளர் அனைவரையும் தவறாது பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தச்சுத் தொழிலாளர் சங்கம்

## வெகுஜனப் போராட்டம்

இந்துமத குருமார் ஒன்றியம் எதிர்வரும் திங்கட்கிழமை 11-1-93 அன்று நாலு அம்சக் கோரிக்கையை முன்வைத்து நடத்தப்படும் வெகுஜன போராட்டத்தில் கலந்து கொள்ள இருப்பதால் சகல இந்துமத குருமார்களும் நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் காலை 9 மணிக்கு சமுகம் தந்து ஊர்வலத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
இந்துமத குருமார் ஒன்றியம்

(சி-5748)

## மாபெரும் வெகுஜனப் போராட்டம்

தமிழீழ மக்களே!

சிறிலங்கா அரசின் அடக்குமுறைகளை கண்டித்து நான்கு அம்சக் கோரிக்கையை முன் வைத்து நாளை மாபெரும் வெகுஜனப் போராட்டம் நடைபெற உள்ளதால் அனைத்துத் தமிழீழ மக்களையும் அணிதிரண்டு வருமாறு அழைக்கிறோம.

ஆரம்பமாகும். இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் முன்பாக.

காலம்: 11 - 01 - 93

இட ஒதுக்கீடு: சாயி மருத்துவக் கல்லூரி

[சி-5726]

## வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

யாழ். மாவட்ட சிமெந்து கட்டிடத் தொழிலாளர் சங்க சகல அங்கத்தவர்களும் எதிர்வரும் 11-01-93இல் நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் ஆரம்பமாகும் வெகுஜனப் போராட்ட ஊர்வலத்தில் காலை 9.00 மணிக்கு கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

யாழ். மாவட்ட
சிமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்:
இல. 10, ஐயனார் கோவில் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்

[3971]

## மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம்: 11 - 01 - 93 திங்கட்கிழமை
நேரம்: காலை 10 மணி
ஆரம்பம்: நல்லூர் கந்தசாமி கோயில் முன்றல்

நாலு அம்சக் கோரிக்கை

## மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம்: 11-1-93 திங்கட்கிழமை காலை 10 மணி

இடம்: நல்லூர் கந்தசாமி கோயில் முன்றல்

பின்வரும் நான்கு கோரிக்கைகளை வலியுறுத்தி யாழ் மாவட்ட வெகுஜன இயக்கத்தினால் முன்னெடுக்கப்படும் இந்நிகழ்விற்கு வலிகாமத்திலுள்ள அனைத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும், வர்த்தக சங்கங்களினதும், வர்த்தக ஊழியர் சங்கங்களினதும். இதர சங்கங்களினதும் அங்கத்தவர்களும் பாவனையாளர்களும் இது எமது போராட்டம் என்ற முழு உணர்வுடன் முழுப்பங்கினையும் அளிக்கும் நோக்குடன் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலுக்கு அலையென திரண்டு வருமாறு வேண்டுகிறோம்.

நான்கு அம்சக் கோரிக்கை

- முப்பத்திரண்டு மாதகாலமாக நடைபெறும் அர்த்தமற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருதல்.
- பூநகரி இராணுவத்தை வாபஸ் பெற்று பூநகரிப் பாதையை மக்கள் பாவனைக்குத் திறத்தல்.
- யாழ். மாவட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்களின் தடையை நீக்கி, பொருள்கள் தடையின்றிக் கிடைக்கச் செய்தல்
- விடுதலைப் புலிகளுடன் உடனடி பேச்சுவார்த்தை ஆரம்பித்தல

யாழ். மாவட்டத்தில் நத்தார் தினத்திலும், தொடர்ந்த நாட்களிலும் விமானப்படையாலும் கடற்படையாலும் ஈவிரக்கமற்ற முறையில் நடாத்தப்பட்ட படுகொலைகளை வெளிக் கொணருதல்

சகல போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வலிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்,
வர்த்தக சங்கங்கள், வர்த்தக ஊழியர் சங்கம்.

(சி-5749)

## நினைவு கூருகின்றோம்
## 1993-01-10

1974 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களிற் கொல்லப்பட்ட 09 தமிழர்கள் -

1986 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - தொண்டமானாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - நெடுந்தீவுப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் மெடிசின் மாஸ்ரர் (யோகநாதன் - பிரதாபன் - 2-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்)

1992 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய - துணைப்படை வீரர் -

ரவி [சுப்பிரமணியம் ரவீந்திரன் - கல்லுவம், கரணவாய் மேற்கு, கரவெட்டி - யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பு - காக்காச்சிவெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கொள்ளவும் 115 நான்காம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5739)

## தவறிவிட்டது

07-01-93 அன்று பிலிப்ஸ் நேர்சிங் ஹோம் — பஸ்ரியன் அச்சகத்திற்கு மிடையில் ஒரு மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(3968)

## புலமைப்பரிசில்வகுப்பு (ஆண்டு 5)

தூர இட மாணவர்களின் வசதி கருதி சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் வாராந்த வகுப்புக்கள் (week end class) ஆரம்பமாகின்றன. அனுமதிக்கு முந்துங்கள். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3963)

லேஸ், தையல் பொருள்கள், எவர் சில்வர், ஸ்கூல் ரவலிங், கான்பாக், இமிரேசன் கவரிங் நகைகள் விளையாட்டுப்பொருள்கள் மொத்தமாக பெற்றுக்கொள்ள, ஜெயா அழகு சாதன மாளிகை 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(3954)

## SEMINAR (IN ENGLISH)

TALK by REV.
Dr. RIENZIE PERERA
of the Anglican Church,
Colombo

TOPIC: Religions in the Current situation a view from the south at the centre for Better Society.

115, 4th cross Street,
Jaffna.
to day Sunday at 3.30p.m
ALL ARE WELCOME
(3963)

## மாபெரும் எழுச்சிப் பேரணி

சிறிலங்கா அரசின் பொருளாதாரத் தடையை எதிர்த்தும் நான்கு அம்சக் கோரிக்கையை முன் வைத்தும், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால், 11-01-93 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லூரில் இருந்து யாழ் செயலகம் வரை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்ட எழுச்சிப் பேரணியில், யாழ். மாவட்டத் தச்சுத்தொழிலாளர் அனைவரையும் தவறாது பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தச்சுத் தொழிலாளர் சங்கம்
யாழ். மாவட்டம்
(3966)

## விளம்பரப் பணிமனை

ஈழநாதம் மக்கள் தினசரியில், வெளியிடுவதற்கான விளம்பரங்கள் அனைத்தும் நள்ளிரவு வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகட்கு:

**S. சிவகரன்** (குண்டுமணி மாஸ்ரர்)
**கே. கே. எஸ். வீதி**
**உடுவில் கிழக்கு,**
**சுன்னாகம்.**

உங்கள் இல்லத்தின்
மங்கள நிகழ்ச்சிகள் முதல்
மற்றும் அனைத்து வகை
விளம்பரங்களும் இங்கு
ஏற்றுக்கொள்ளப்படும்.

சிறிலங்கா அரசின் ... நான்கு அம்சக் கோரிக்கையை முன் வைத்து நாளை மாபெரும் வெகுஜனப் போராட்டம் நடைபெறவுள்ளதால் அனைத்துத் தமிழீழ மக்களையும் அணிதிரண்டு வருமாறு அழைக்கிறோம்.

ஆரம்பமாகும் இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் முன்பாக.
காலம்: 11 - 01 - 93
இட ஒதுக்கீடு: சாயி மருத்துவக் கல்லூரி
[சி-5726]

## வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

யாழ். மாவட்ட சீமெந்து கட்டிடத் தொழிலாளர் சங்க சகல அங்கத்தவர்களும் எதிர்வரும் 11-01-93இல் நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் ஆரம்பமாகும் வெகுஜனப் போராட்ட ஊர்வலத்தில் காலை 9.00 மணிக்கு கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

யாழ். மாவட்ட
சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்:
இல. 10, ஐயனார் கோவில் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்
[3971]

## மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம்: 11 - 01 - 93 திங்கட்கிழமை
நேரம்: காலை 10 மணி
ஆரம்பம்: நல்லூர் கந்தசாமி கோயில் முன்றல்

### நாலு அம்சக் கோரிக்கை

1. 32 மாத காலம் அர்த்தமற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருதல்.
2. பூநகரி இராணுவத்தை வாபஸ் பெற்று அதனூடான பாதையை மக்களின் பாவனைக்காக திறக்கப்படல்.
3. அத்தியாவசியப் பொருள்களின் தடையை நீக்கி சகல பொது மக்களுக்கும் கட்டுப்பாடு தட்டுப்பாடின்றி கிடைக்கக் கூடியதாக விநியோகம் செய்தல்.
4. விடுதலைப் புலிகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்தல்.

நத்தார் தினத்தன்று நடைபெற்ற கண்மூடித்தனமான விமானத் தாக்குதல், கிளாலி படகு போக்குவரத்து சேவை படுகொலை, சித்தன்கேணிப் படுகொலை ஆகியவற்றை தெரியப்படுத்துதல்.

ஊர்வலம் நல்லூர் கந்தசாமி கோயில் முன்றலில் ஆரம்பமாகி கோயில் வீதி, வழியாக செஞ்சிலுவைச் சங்க பணிமனையை அடைந்து பின்னர் ஆஸ்பத்திரி வீதி ஊடாக கச்சேரியை அடைந்து இரண்டு இடங்களிலும் மகஜர் கையளிக்கப்படும். அனைத்து மக்களையும் பங்குபற்றுமாறு வேண்டுகிறோம்.

வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம்.
[3972]

...தை ஆரம்பித்தல

யாழ். மாவட்டத்தில் நத்தார் தினத்திலும், தொடர்ந்த நாட்களிலும் விமானப்படையாலும் கடற்படையாலும் ஈவிரக்கமற்ற முறையில் நடாத்தப்பட்ட படுகொலைகளை வெளிக் கொணருதல்

சகல போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

வலிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்,
வர்த்தக சங்கங்கள், வர்த்தக ஊழியர் சங்கம்.
(சி-5749)

## நினைவு கூருகின்றோம்
## 1993-01-10

1974 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட அட்டூழியங்களிற் கொல்லப்பட்ட 09 தமிழர்கள்-

1986 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - தொண்டமானாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - நெடுந்தீவுப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பிரங்கித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் மெடிசின் மாஸ்ரர் (யோகநாதன் - பிரதாபன் - 2-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்)

1992 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய - துணைப்படை வீரர் -

ரவி [சுப்பிரமணியம் ரவீந்திரன் - கல்லுவம், கரணவாய் மேற்கு, கரவெட்டி - யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பு - காக்காச்சிவெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

லெப். தீபன்- காஞ்சிலியன் [வைத்திலிங்கம் தங்கவேல் - 35-ம் கிராமம், பக்கியெல்ல - மட்டக்களப்பு]

சிவராஜா [அழகப்போடி சதானந்தசுந்தரம் - தாமரைக்கேணி, காக்காச்சிவெட்டை, மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த நாட்டுப் பற்றாளரான-

இராஜன் [முனைக்காடு - மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - சித்தாண்டிப் பகுதியில் ஆலயமொன்றிற்கு முன்னால் - வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் போடப்பட்டிருந்த குண்டொன்றை அகற்ற முயன்றபோது அது வெடித்ததில் கொல்லப்பட்ட - சித்தாண்டி மகா வித்தியாலய மாணவர்களான - 2 தமிழ்ச் சிறுவர்கள்.

யாழ்ப்பாணம் - தீவகப் பகுதியிலிருந்து குருநகர் நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
[சி-5747]

# எட்டு இலட்சம் தமிழ் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றம்

## தொண்டர் ஸ்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

1981-ம் ஆண்டில் குடிசன மதிப்பீட்டின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பதினெழுலட்சம் மக்கள் சொந்த வீடுகளில் வாழ்ந்துள்ளனர். ஆனால் தற்போது ஒன்பது லட்சத்திற்கும் குறைவான மக்களே சொந்த வீடுகளில் வாழ்வதாக தொண்டர் ஸ்தாபனம் ஒன்று வெளியிட்டுள்ள தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

வடக்கு, கிழக்கு யுத்தத்தின் காரணமாக சுமார் எட்டு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருப்பதாகக் கூறியுள்ள அந்த தகவலில்; மேலும், சுமார் நாலரை லட்சத்திற்கும் மேற்பட்டோர் வடக்கு, கிழக்கு பகுதியிலிருந்து வெளியேறியிருப்பதாகவும், சுமார் இரண்டு லட்சமானோர் இந்தியாவில் அகதிகளாக இருப்பதாகவும், சுமார் இரண்டு லட்சம் வரையிலான வடக்கு, கிழக்கு மக்கள் இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கு இடம் பெயர்ந்திருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சுமார் மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்குள்ளேயே இடம் பெயர்ந்து சீவிப்பதாகவும், இவர்களில் சுமார் இரண்டரை லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள், சுமார் 242 அகதிகள் முகாம்களில் சீவிப்பதாகவும், ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமானோர் தனியார் வீடுகளில் இடம் பெயர்ந்து வசிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினையில் தொண்டாவின் நிலை வெறும் கேலிக் கூத்தாகும்

(கொழும்பு)

''தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினை வேறு. வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினை வேறு. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை இன்று அப்படியே இருக்கும்போது வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கபோவதாக கூறுவது கேலிக்கூத்தாகும்;'' என முன்னாள் இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகி ஸி. பி. ராமையா தெரிவித்துள்ளார்.

''லங்கா தீப'' பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; ''வட்டுக்கோட்டை தீர்மானத்தில் பங்கேற்ற மூன்று அரசியல் தலைவர்களில் தொண்டமானும் ஒருவர். ஆனால் நாடு பிரிபடுவதைத்தான் எதிர்ப்பதாக கூறிப் பின்னர் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் இன்று தெரிவுக்குழுமுன் அவர் முன் வைத்த தீர்வு நாட்டிற்கு ஒரு ஆபத்தானது. இதனை எதிர்த்ததனால் தெரிவுக்குழுவில் இருந்து விலகியதாக அவர் அறிக்கைவிட்டுள்ளார்.

எனவே தொண்டமானினால் எந்தவொரு விடயத்தையும் சரியாகச் செய்யமுடியாது'' என்று கூறினார்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடற் புலியின் துணைப்படைவீரர்

### முதலாவது பிறந்ததினம்



### கொள்ளை முயற்சி முறியடிப்பு

(சாவகச்சேரி)

கண்டிவீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள வானொலிப் பெட்டி திருத்தும் நிலையமொன்றில் இருந்து பெறுமதி மிக்க மின் உபகரணங்களைக் கொள்ளையிட முயன்ற இரு இளைஞர்கள் தமிழீழ காவல் துறையினரால் கையும்மெய்யுமாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு நிகழ்ந்துள்ளது. பொதுமக்கள் கொடுத்த தகவலின்படி கொள்ளையர் கொள்ளையில் ஈடுபட்டிருக்கும் பொழுதே கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை இவ் வர்த்தக நிலையத்திற்கு முன்புள்ள பல சரக்குக் கடையிலும் இதற்கு முன்தினமிரவு பெறுமதி மிக்க பொருள்கள் கொள்ளையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (38)

### அரிச்சுவடி அன்பளிப்பு

தைப்பூச தினத்தன்று வித்தியாரம்பம் செய்து வைக்கத் தேவையான அரிச்சுவடிகள் மில்க்வைற் நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றன, இவ் அரிச்சுவடி ஏடுகள் தேவைப்படுபவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளும்படி மில்க்வைற் தாபனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

### தையல் பயிற்சி வகுப்புக்கள்

[கொடிகாமம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவின் மீசாலை கிழக்கு அலகில் இளம் யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு போதனாசிரியை செல்வி மஞ்சுளா அவர்களால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வகுப்புக்கு சுமார் 150 யுவதிகள் வரை சமூகமளித்தனர்.

### சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

வலி வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள பாலர்பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் சிறீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்திரு.

### தமிழீழ மக்களின் ஒன்றிணைந்த மாபெரும் வெகுஜனப் போராட்டமும் ஊர்வலமும்

காலம்: 11-01-1993 திங்கட்கிழமை காலை 10 மணி

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் முன்றல்

பின்வரும் 4 கோரிக்கைகயை வலியுறுத்தி யாழ். மாவட்ட வெகுஜன இயக்கத்தினால் முன்னெடுக்கப்படும் வெகுஜனப் போராட்டத்திலும் ஊர்வலத்திலும் அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களினதும், சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கங்களினதும் இதர சங்கங்களினதும் அங்கத்தவர்களும், பணியாளர்களும், பாவனையாளர்களும் ''இது எமது போராட்டம்'' என்ற உணர்வுடன் முழுப் பங்கினை அளித்து போராட்டம் வெற்றி பெற உதவுவதற்கு நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலுக்கு அலையெனத் திரண்டு வருமாறு வேண்டுகிறோம்.

நான்கு அம்ச கோரிக்கை

- ★ 32 மாதகாலம் நடைபெறும் அர்த்தமற்ற போரை முடிவுக்குக் கொண்டு வருதல்.
- ★ பூநகரி இராணுவத்தை வாபஸ்பெற்று பூநகரிப் பாதையை மக்கள் பாவனைக்குத் திறத்தல்.
- ★ யாழ். மாவட்டத்துக்கு விதிக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்கள் தடையை நீக்கி, பொருள்கள் தடையின்றிக் கிடைக்கச் செய்தல்.
- ★ விடுதலைப் புலிகளுடன் உடனடி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவும்.

யாழ். மாவட்டத்தில் நத்தார் தினத்திலும், தொடர்ந்த நாட்களிலும் விமானப் படையாலும். கடற்படையாலும் ஈவிரக்கமற்ற முறையில் நடாத்தப்பட்ட படுகொலைகளை வெளிக்கொணரவும்.

யாழ்ப்பாண மாவட்ட
கூட்டுறவுச் சபை

[சி/5744]

### ஈழநாதம் 3-ம் ஆண்டு நிறைவு

### போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப்படப் போட்டி [Cartoon], கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பவற்றை நடாத்த முன் வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

- ★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.
- ★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.
- ★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப் பட்டதாக இருத்தல் வேண்டும்.

சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

- ★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்

# வெறும் கேலிக் கூத்தாகும்

(கொழும்பு)

"தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினை வேறு. வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினை வேறு. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை இன்று அப்படியே இருக்கும் போது வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கபோவதாக கூறுவது கேலிக்கூத்தாகும்;" என முன்னாள் இலங்கைத் தோட்டத்தொழிலாளர் காங்கிரஸ் நிர்வாகி சி. பி. ராமையா தெரிவித்துள்ளார்.

"லங்கா தீப" பத்திரிகைக்கு அவர் அளித்த பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; "வட்டுக்கோட்டை தீர்மானத்தில் பங்கேற்ற மூன்று அரசியல் தலைவர்களில் தொண்டமானும்ஒருவர். ஆனால் நாடு பிரிபடுவதைத் தான் எதிர்ப்பதாக கூறிப் பின்னர் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். ஆனால் இன்று தெரிவுக்குழு முன் அவர் முன் வைத்த தீர்வு நாட்டிற்கு ஒரு ஆபத்தானது. இதனை எதிர்த்ததனால் தெரிவுக்குழுவில் இருந்து விலகியதாக அவர் அறிக்கைவிட்டுள்ளார்.

எனவே தொண்டமானினால் எந்தவொரு விடயத்தையும் சரியாகச் செய்யமுடியாது" என்று கூறினார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி — முதலாவது பிறந்ததினம்



கடற் புலியின் துணைப்படைவீரர்

### ரவி

(சுப்பிரமணியம் ரவீந்திரன்)

வீரப்பிறப்பு: 31-04-1968 — வீரச்சாவு: 10-01-1992



சுப்பிரமணியம்

### ரவீந்திரன்

(ரவி)

மாண்டு போய் மீண்டும் மலர்ந்த மாவீரன் ரவி நீ கடலிலே
மடிந்து மீண்டும் தரையிலே வந்து எங்களுடன் இருக்கிறாய்
என்பது உண்மை, உன் பழைய உருவத்தை நினைக்கும்
போது கவலை ஆனால் உன் சிறு உருவத்தையும்
உன் பேச்சையும் கேட்கும் போது சந்தோசம், நீ மறு
பிறவி பிறந்து எங்களுடன் தான் இருக்கிறாய் என்பது
உண்மை, உன் வரலாறு பொன் எழுத்துக்களால்
பொறிக்கப்படும் என்பது உண்மை
நீ மடியவில்லையடா உன்கதை முடியவில்லையடா

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் முதலாவது நினைவஞ்சலியிலும் முதலாவது பிறந்த நாள் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் நண்பர்களையும் உறவினர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

கல்லுவம்
கரணவாய் மேற்கு
கரவெட்டி.

— ரவி குடும்பத்தினர்

(3960)

...தியாரம்பம் செய்து வைக்கத் தேவையான அரிச்சுவடிகள் மில்க்வைற் நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றன, இவ் அரிச்சுவடி ஏடுகள் தேவைப்படுபவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளும்படி மில்க்வைற் தாபனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## தையல் பயிற்சி வகுப்புக்கள்

[கொடிகாமம்]

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவின் மீசாலை கிழக்கு அலகில் இளம் யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு போதனாசிரியை செல்வி மஞ்சுளா அவர்களால் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வகுப்புக்கு சுமார் 150 யுவதிகள் வரை சமூகமளித்தனர்.

## சிறுவர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

வலி வடக்கு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளபாலர்பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் சிறீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் நடைபெற்ற மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்ற சிறுவர்களுக்கான பரிசில்களை முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட தெல்லிப்பழை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர்திரு. எஸ். நடராஜா அவர்கள் வழங்கினார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர், மற்றும் தெல்லிப்பழை வட்டப்பிரிவுப் பொறுப்பாளர் ஆகியோர் போட்டிகளில் கலந்து சிறப்பித்தனர்.

## தற்கொலை

(வடமராட்சி)

பருத்தித்துறை பகுதியில் கடந்த இரண்டு தினங்களில் இரண்டு தற்கொலையும், ஒரு விபத்து மரணமும் நடைபெற்றுள்ளது.

உடுப்பிட்டி இமையாணன் வாசியான திருமதி சரஸ்வதி ஐயாத்துரை (வயது 68) என்ற மூதாட்டி குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயக் கேணியில் விழுந்து நீரில் மூழ்கி மரணமானார்.

மேலும் செல்வி இராசேஸ்வரி நடராசா என்பவர் நஞ்சருந்தியும், திருமதி செல்லம்மா கிருஷ்ணபிள்ளை கழுத்தில் சுருக்கிட்டும் தற்கொலை செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. (யோ)

...

★ விடுதலைப் புலிகளுடன் உடனடி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கவும்.

யாழ். மாவட்டத்தில் நத்தார் தினத்திலும், தொடர்ந்த நாட்களிலும் விமானப் படையாலும், கடற்படையாலும் ஈவிரக்கமற்ற முறையில் நடாத்தப்பட்ட படுகொலைகளை வெளிக்கொணரவும்.

யாழ்ப்பாண மாவட்ட
கூட்டுறவுச் சபை

[சி/5744]

## ஈழநாதம்
# 3-ம் ஆண்டு நிறைவு
## போட்டிகளும் விதிமுறைகளும்

மக்கள் தினசரி 'ஈழநாதம்' தன் மூன்றாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக கருத்துப்படப் போட்டி [Cartoon], கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி என்பனவற்றை நடாத்த முன் வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

- கருத்துப் படங்கள் [Cartoon]
- சிறுகதை
- கவிதை

### போட்டியில் கலந்து கொள்ள கடைப்பிடிக்க வேண்டியவை

★ படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திக்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

★ கருத்துப் படங்கள் 15 செ.மீ X12 செ.மீ அளவுள்ள அட்டையில் கறுப்பு, வெள்ளை கோட்டுப் படங்களாக அமைதல் வேண்டும்.

★ படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
சிறுகதைகள் சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்,

★ கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ படைப்பாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ ஆக்கங்கள் இதற்கு முன் பிரசுரமானவைகளாகவோ, வேறெங்கும் பிரசுரம் பெறுவதற்காக கையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.

★ போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் பெப்ரவரி 5ஆம் திகதிக்கு பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்திற்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எக்காரணம் கொண்டும் போட்டிக்கான முடிவுத் திகதி நீடிக்கப்பட மாட்டாது என்பதுடன், பிந்திக்கிடைப்பவை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

★ போட்டி முடிவுகள் யாவும் 17-02-1993 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
மூன்றாவது ஆண்டு நிறைவு விழா போட்டியில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானது எனத்தேர்ந்தெடுக்கப்பட்டவை ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும் முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு மூன்றாவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் 'ஈழநாதம்' ஆண்டு நிறைவுப் போட்டி என கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு.

ஆசிரியர்
'ஈழநாதம்'
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## வீடமைப்பு அதிகார சபை புள்ளிவிபரம் திரட்ட முயற்சி

(வடமராட்சி)

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வடமராட்சிப் பகுதியில் வடமராட்சி வடக்கு கிழக்கு, தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவுகளில் வறுமையிலும் வறுமையாக உள்ளவர்களுக்கு அவசிய வீட்டுத் தேவை பற்றிய புள்ளி விபரத் திரட்டு மதிப்பீடு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஒவ்வொரு கிராம சேவை உத்தியோகத்தர் மட்டத்தில் உள்ள அடிமட்டக் குழுக்களாக இருந்து வரும் சன சமூக நிலையங்கள் ஐக்கிய நாணய சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், கடற்றொழில் அமைப்புக்கள் ஊடாக இப்புள்ளி விபரத் திரட்டு எடுக்கப்படவுள்ளது.

இது சம்பந்தமாக மேற்குறித்த அமைப்புக்கள் அவ்வப் பகுதி பிரதேச செயலர் பிரிவு அலுவலகங்களில் புதன் கிழமை தோறும் கடமை புரியும் வீடமைப்பு உப வேலைப் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட முகாமையாளர் திரு ரி. பி. முருகையா தெரிவித்துள்ளார்.

மற்றும் 1992 ஆம் ஆண்டு வறுமையிலும் வறுமையானவர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் நிவாரணம் பெற்றவர்கள் தங்கள் வீடுகளை தைமாதம் 15 ஆம் திகதிக்கு முன் பூர்த்தியாக்கி மீதியாகவுள்ள சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ளலாமெனவும் முகாமையாளர் திரு. ரி. பி. முருகையா மேலும் தெரிவித்துள்ளார். (யோ)

## ஜனாதிபதி தேர்தல் குறித்து அறிக்கை வெளியிடப்படும்

1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிக்கை ஒன்றைத் தேர்தல் ஆணைக்குழு வெளியிடவுள்ளது.

மேற்படி ஜனாதிபதித் தேர்தல் செல்லுபடியாகாது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொடுத்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து இவ்வறிக்கை வெளியிடப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

## நாடு முழுவதுமே அகதிமுகாமாகி விட்டது

—காமினி திஸநாயக்கா

[கொழும்பு]

நாடு முழுவதுமே ஒரு அகதி முகாமாக மாறிவிட்டது. வடக்கு-கிழக்கு யுத்த முனைகளில் பல கஷ்டங்களின் மத்தியில் போராடும் இராணுவம் நாட்டையும் ஆட்சியாளரையும் பாதுகாத்து வருகிறது. ஆட்சியாளர் விடும் தவறுகளுக்குப் பொலிஸ் படை பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அரசின் கேளிக்கைகளுக்குப் பணம் வசூல் செய்பவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் காமினி திஸாநாயக்கா தெரிவித்தார்.

குண்டசாலைத் தொகுதியில் சிறிசித்தார்த்த பொத்கல் விகாரையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில், மணிக்கூட்டு கோபுரங்களைக் கட்டுவதன்மூலம் நாட்டின் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. எமது ஜனாதிபதியும், நாமும் உலகம் முழுவதும் பரிகாசத்துக்கு உள்ள பொருள்களாகி விட்டோம் என்றும்,

1993ஆம் ஆண்டை முக்கிய முடிவு எடுக்கும் ஆண்டாகவும், தேர்தல் ஆண்டாகவும் நாம் கருத வேண்டும். ஒளிமயமான எதிர்காலத்தை எட்டுவதற்குச் சரியான முடிவைச் சரியான சமயத்தில் எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## பிரச்சினை தீர சமஷ்டி நல்லதொரு வழியாகும்

-கனேடியத் தூதுவர்

[கொழும்பு]

சமஷ்டி அமைப்பானது


# JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY VADDUKODDAI

## யாழ்ப்பாணத்திலும் வட்டுக்கோட்டையிலும் முழுநேரப் பயிற்சி நெறிகள் பெப்ரவரி 1993இல் ஆரம்பமாகவுள்ளன

### வட்டுக்கோட்டையில் நடாத்தப்படும் பயிற்சிநெறிகள்

**1. Technician Diploma Course**
(ஆங்கில மூலம்)
N D. T. தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

**i) Civil Engineering**
கல்வித் தகைமை; G. C. E (O/L) கணிதம் C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம் - S, உட்பட6பாடங்களில் சித்தி
காலம்: 2 வருடங்கள்

**2. DiplomaCourse(ஆங்கிலமூலம்)**

**i) Draughtsmanship (civil)**

**ii) Computer Programming & DataProcessing**
(BASIC, COBOL, & dBASE III+) Practical on IBM Pc AT & MAT 386 Industrial Controller
கல்வித்தகைமை : G. C E. (O/L) கணிதம்-C உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம் : ஒரு வருடம்

**iii) Advanced Diploma in Computing**
(Syllabus includes British Computer Society&Australian Computer Society)
கல்வித் தகைமை G C. E. (O/L) இல் கணிதம் - C ஆங்கிலம் S, உடன் G.C.E. (A / L) குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி
காலம் ; ஒருவருடம்

**3. Technician Certificate Course**

**i) Radio & T. V. Servicing**
காலம் : ஒரு வருடம்

**ii) Automobile Technology**
காலம் : ஒரு வருடம்
கல்வித் தகைமை ! G.C.E.(O/L) இல் கணிதம்-S விஞ்ஞானம் - S

**4. Craft Certificate Course**
(தமிழ் மூலம்)

**i) இயந்திரசாலைப் பயிற்சி**
காலம் : ஒரு வருடம்
(Machine Shop Practice)

**ii] பொருத்துனர் பயிற்சி**

**iii) ஓட்டுனர் கட்டுமானர்**
காலம் : ஒரு வருடம்
பொருத்துனர் பயிற்சி
(Welding, Fabrication & Fitting)

**iv) மின்னிணைப்புப் பயிற்சி**
காலம் : ஒரு வருடம்
(Electrical Wiring & Installation Practice)
கல்வித்தகைமை : G. C. E. [O / L] வரை படித்திருத்தல் வேண்டும்

### யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் பயிற்சிநெறிகள்

**1. Technician Diploma Course**
(ஆங்கிலமூலம்)
N D.T. தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

**i) Civil Engineering**
கல்வித்தகைமை : G. C. E.(O /L) கணிதம்-C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம்-S உட்பட 6 பாடங்களில் சித்தி காலம் : 2 வருடங்கள்

**2. DiplomaCourse[ஆங்கிலமூலம்]**

**i) Draughtsmanship (Civil)**

**ii] Computer Programming & Data Processing**
(BASIC, COBOL&dBASE III+)
Practical on *IBM - PC, AT & MAT* 386 Industrial Controller
கல்வித்தகைமை ; G. C, E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி
காலம் : 1 வருடம்

**iii Advanced Diploma in Computing**
(Syllabus includes british Computer Society & Australian Computer Society)
கல்வித்தகைமை : G. C. E.(O / L) கணிதம்-C. ஆங்கிலம் - S உடன் G. C. E. (A /L) இல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி
காலம்; ஒரு வருடம்

**3. Engineering Course**
Full time Preparing Students For E. C. E. Part I (London) Exam & IESL PART I Exam Qualification:

## அறிக்கை வெளியிடப்படும்

1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிக்கை ஒன்றைத் தேர்தல் ஆணைக்குழு வெளியிடவுள்ளது.

மேற்படி ஜனாதிபதித் தேர்தல் செல்லுபடியாகாது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொடுத்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து இவ்வறிக்கை வெளியிடப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்தார்.

## நாடு முழுவதுமே அகதிமுகாமாகி விட்டது

—காமினி திஸநாயக்கா

[கொழும்பு]

நாடு முழுவதுமே ஒரு அகதி முகாமாக மாறிவிட்டது. வடக்கு-கிழக்கு யுத்த முனைகளில் பல கஷ்டங்களின் மத்தியில் போராடும் இராணுவம் நாட்டையும் ஆட்சியாளரையும் பாதுகாத்து வருகிறது. ஆட்சியாளர் விடும் தவறுகளுக்குப் பொலிஸ் படை பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அரசின் கேளிக்கைகளுக்குப் பணம் வசூல் செய்பவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க வேண்டியுள்ளது என்று ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் காமினி திஸாநாயக்கா தெரிவித்தார்.

குண்டசாலைத் தொகுதியில் சிறிசித்தார்த்த பொத்கல் விகாரையில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில், மணிக்கூட்டு கோபுரங்களைக் கட்டுவதன்மூலம் நாட்டின் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. எமது ஜனாதிபதியும், நாமும் உலகம் முழுவதும் பரிகாசத்துக்கு உள்ள பொருள்களாகி விட்டோம் என்றும்,

1993ஆம் ஆண்டை முக்கிய முடிவு எடுக்கும் ஆண்டாகவும், தேர்தல் ஆண்டாகவும் நாம் கருத வேண்டும். ஒளிமயமான எதிர்காலத்தை எட்டுவதற்குச் சரியான முடிவைச் சரியான சமயத்தில் எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## பிரச்சினை தீர சமஷ்டி நல்லதொரு வழியாகும்

-கனேடியத் தூதுவர்

[கொழும்பு]

சமஷ்டி அமைப்பானது எமது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சிறந்ததொரு வழியாக இருப்பதாக நாம் உணர்கின்றோம் என்று கொழும்பிலுள்ள கனேடியத் தூதுவர் பென்னோ. ரி. பிளான்ஸா குறிப்பிட்டார். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; கனேடியர்கள் என்ற வகையில் நாம் எதிர்நோக்கும் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் சமஷ்டி அமைப்பை 21ஆம் நூற்றாண்டில் மேலும் செழுமைபடுத்த முனைந்துள்ளோம்.

கனடாவானது ஆரம்பம் முதலே இருமொழி பேசும் மக்களைக் கொண்டதாக துண்டாடப்பட்ட பிரதேசங்களை ஒருங்கிணைத்ததாக சுதந்திரமான ஜனநாயகம் மிக்கதாக விளங்கி வருகின்றது. சமஷ்டி அமைப்பின் மூலம் இந்த ஒவ்வொரு பண்பும் கௌரவிக்கப்படுவதன் வாயிலாக அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகின்றது. மேலும் சமஷ்டி அமைப்பானது அதிகாரத்தை மையப்படுத்துவதற்குப் பதிலாக ஐக்கியத்தைப் பேணுவதில் பங்காற்றுகிறது எனவும் தெரிவித்தார்.

---

## மூக்குக்கண்ணாடி அன்பளிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் 487 பொதுமக்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஞாயிறு மாலை 3.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் வைத்து கண் பரிசோதனையின் பின் மற்றுமொரு தொகுதி கண்ணாடிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. இவ்வைபவத்தில் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு, இக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு பூ. வெற்றிவேலு ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டு கண்ணாடிகளை வழங்கினர். (35)


## 2. DiplomaCourse(ஆங்கிலமூலம்)

**i) Draughtsmanship (civil)**

**ii) Computer Programming & DataProcessing**

(BASIC, COBOL, & dBASE III+) Practical on IBM Pc AT & MAT 386 Industrial Controller

கல்வித்தகைமை : G. C E. (O/L) கணிதம்-C உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம் : ஒரு வருடம்

**iii) Advanced Diploma in Computing**

(Syllabus includes British Computer Society&Australian Computer Society)

கல்வித் தகைமை G C. E. (O/L) இல் கணிதம் - C ஆங்கிலம் S, உடன் G.C.E. (A / L) குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி

காலம் ; ஒருவருடம்

## 3. Technician Certificate Course

**i) Radio & T. V. Servicing**

காலம் : ஒரு வருடம்

**ii) Automobile Technology**

காலம் : ஒரு வருடம்

கல்வித் தகைமை ! G.C.E.(O/L) இல் கணிதம்-S விஞ்ஞானம் - S

## 4. Craft Certificate Course

(தமிழ் மூலம்)

**i)** இயந்திரசாலைப் பயிற்சி

காலம் : ஒரு வருடம்

(Machine Shop Practice)

**ii]** பொருத்துனர் பயிற்சி

காலம் : 6 மாதங்கள்

(Fitters Practice)

## 1. Technician Diploma Course

(ஆங்கிலமூலம்)

N D.T. தரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

**i) Civil Engineering**

கல்வித்தகைமை : G. C. E.(O/L) கணிதம்-C, விஞ்ஞானம் - C, ஆங்கிலம்-S உட்பட 6 பாடங்களில் சித்தி காலம் : 2 வருடங்கள்

## 2. DiplomaCourse[ஆங்கிலமூலம்]

**i) Draughtsmanship (Civil)**

**ii] Computer Programming & Data Processing**

(BASIC, COBOL&dBASE III+)

Practical on *IBM - PC, AT & MAT* 386 Industrial Controller

கல்வித்தகைமை ; G. C, E. (O/L) கணிதம் - C உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம் : 1 வருடம்

**iii Advanced Diploma in Computing**

(Syllabus includes british Computer Society & Australian Computer Society)

கல்வித்தகைமை : G. C. E.(O/L) கணிதம்-C. ஆங்கிலம் - S உடன் G. C. E. (A/L) இல் குறைந்தது ஒரு பாடத்தில் சித்தி

காலம்; ஒரு வருடம்

## 3. Engineering Course

Full time Preparing Students For E. C. E. Part I (London) Exam & IESL PART I Exam Qualification: G. C. E. (A/L) Maths with 3 or 4 Passes in two Sittings

### விஷேட கவனத்திற்கு:-

❋ பிறநாட்டு பரீட்சைகளை எடுக்கத்தக்கதாக (4) தவிர்ந்தஎல்லா பாடநெறிகளும் ஆங்கில மூலமாக தமிழ் விளக்கத்துடன் நடாத்தப்படும்.மேலும் இதற்கு துணையாக பாடநெறி காலம் முழுவதும் ஆங்கிலபாடம் கட்டாயமாக படிப்பிக்கப்படும்.

❋ பொருளாதார வசதி குறைந்த மாணவர்களுக்கு போதிய சான்றுகள் சமர்ப்பிக்குமிடத்து உதவித் தொகை வழங்கப்படும்.

❋ நூலக வசதி உண்டு.

### முக்கிய குறிப்பு

❋ விண்ணப்பப்படிவம் விலை ரூபா30/-

பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள்:-

(a) J. C. I. T அலுவலகம், வட்டுக்கோட்டை

(b) J. C. I. T 182, 1 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

❋ விண்ணப்பப்படிவங்களை 20-01-1993 காலை 10.00 மணிக்கு முன்னர் J.C.I.T. அலுவலகம், வட்டுக்கோட்டையில் கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

❋ போதியளவு மாணவர் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரமே குறிப்பிட்ட பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படும்.

(சி-5648)

**பணிப்பாளர்.**

### சிந்தனைக்கு

வாழ்வில் மனநிறைவு பெறுவது
நீ வாழும் ஆண்டுகளைப் பொறுத்ததல்ல.
உன் ஆற்றல் மற்றும் உறுதியைப் பொறுத்தது.
— மிஷேல் தெ. மொன்ர்தேன்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 10-01-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

# படுகொலைக்கு சட்டப் பாதுகாப்பு

யாழ்ப்பாணக் கடல் நீரேரியை கடந்த ஆறாம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்ட பிரதேசமாக சிறிலங்கா ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். இதன் பிரகாரம் யாழ். கடல் நீரேரியில் மீன்பிடிப்பதோ, அன்றிப் பயணம் செய்வதோ சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி யாழ். கடல் நீரேரிப் பகுதியில், செல்லும் படகுகள் மீது சிறிலங்கா ஆயுதப்படையினர் நடவடிக்கை எடுப்பதற்கு இவ் அறிவிப்பு அனுமதி வழங்கியுள்ளது எனலாம்.

அண்மையில், கிளாலிக்கடற்பரப்பில் அப்பாவித் தமிழ்மக்கள் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து எழுந்த கண்டனங்களை அடுத்தே சிங்கள அரசாங்கம் இப் பிரகடனத்தை செய்ததாகத் தெரிகிறது.

சிங்களப் பேரினவாதம் புரிந்த இனப்படுகொலைகளின் பட்டியல் தொடர்ந்தும் நீண்டுகொண்டே செல்கின்றது. இப்படுகொலைகளில் பெரும்பாலானவற்றிற்கு விசாரணை கிடையாது. ஒரு சிலவற்றிற்கு விசாரணைகள் நடைபெற்றன. விசாரணைகளும் கொலைக்குக்காரணம் தேடுபவையாகவே இருந்தன. விசாரணையின் முடிவுகள் காரணங்களையும் கண்டு பிடித்தன. உணர்ச்சிவசப்பட்ட நிலை, சூரியஒளியினால் ஏற்பட்ட தாக்கம்,புத்திசுவாதியீனம் என்பன கண்டுபிடிக்கப்பட்ட காரணங்களில் சில. இந்நிலையில், தமிழர்படுகொலைகள் குறித்த விசாரணைக்கமிசன் என்பது ஒரு வேடிக்கையான தொன்றாகவே உள்ளது. இதனால், தமிழ் மக்கள் விசாரணைக்கமிசன் மூலம், தமக்கு நீதிகிட்டும் என்ற நம்பிக்கையைக்கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் கிளாலிப் படகு படுகொலை தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் 'தமது பங்கிற்கு' விசாரணைக் கமிசன் வேண்டும் என ஒரு கோரிக்கையைவிடுத்தனர். ஆனால், அரசாங்கமோ, இனி கொலைகளுக்கான காரணம் தேடுவது சிரமம் என்ற அடிப்படையில் சட்டத்தின் மூலமே யாழ்ப்பாணக் கடல்நீரேரியைத் தடை செய்து

# மத்திய அமைச்சர் மாதவராவ்சிந்தியா நேற்று பதவி துறந்தார்

(டில்லி)

இந்தியாவின் மத்திய விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் மாதவராவ் சிந்தியா தமது பதவியை நேற்று இராஜினாமாச் செய்தார்.

நேற்றுக் காலை ஹைதராபாத்திலிருந்து புதுடில்லிக்கு வந்து சேர்ந்த பல்கேரிய விமானமொன்று புதுடில்லி விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகி நொருங்கிப் போனதற்கு தார்மீகப் பொறுப்பேற்றே அமைச்சர் சிந்தியா தமது பதவியை இராஜினாமாச் செய்தார் எனினும், இவ்விமானத்தில் பயணம் செய்த 167 பயணிகளும், மற்றும் விமானிகளும் ஆபத்து எதுவுமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

இந்தியாவில் தற்போது உள்ளூர் விமானிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதையடுத்து வெளிநாட்டு விமானங்களும், விமானிகளும் சேவைக்கு அமர்த்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

நேற்று அதிகாலை நான்கு மணியளவில் இந்த விமானம் டில்லி விமான நிலையத்தின் ஓடுபாதையில் இறங்காமல் தரையில் இறங்கியதால் தீப்பிடித்து விபத்திற்கு உள்ளாகியது.

# பம்பாயில் மீண்டும் கலவரம் 35 பேர் வரையில் பலி

[டில்லி]

பம்பாயில் இந்து - முஸ்லிம் கலவரங்கள் நேற்று முன்தினம் மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இறந்தவர்களின் எண்ணிக்கை 35ஐ எட்டியுள்ளது என்று மருத்துவ மனையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீடுகளுக்குத் தீவைத்ததில் குறைந்தது ஐந்து பேர் தீயில் கருகி இறந்துள்ளனர். நகரில் பல பகுதிகளில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அயோத்தியில் பாபர் மசூதி தகர்க்கப்பட்டது தொடர்பாக நடைபெற்ற கலவரங்களில் பம்பாயில் 200க்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் என்பது தெரிந்ததே.

மேற்கு மாநிலமான குஜராத்திலும் இனக்கலவரங்கள் நிகழ்ந்துள்ளன. தலைநகர் அகமதாபாத்தில் நேற்று ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். தலைநகரின் பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# மிரட்டல்களுக்கு அஞ்சோம் யுத்தம் நடத்தத் தயார்

### ஈராக் அறிவிப்பு

(பாக்தாத்)

மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம் யுத்தம் நடத்த தயாராக இருக்கின்றோம் எனவும் ஈராக் மேற்கு நாடுகளை எச்சரித்துள்ளது. அது மேலும் கூறுகையில்; ஈராக்கின் தென்பகுதியிலிருந்து விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மீளப்பெறப்பட மாட்டாது எனவும், தாக்குதல் நடத்தப்பட்டால் பதிலடி தரப்படும் எனவும், ஈராக்கின் பிரதிப் பிரதமரான தாரிக் அஸீஸ் அவசர அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் ஈராக்கின் தென் பகுதியிலிருந்து விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மீளப்பெறப்படவேண்டுமெனவும் அதற்கு நாற்பத்தியெட்டு மணிநேர காலக்கெடு விதிப்பதாகவும் மேற்கு நாடுகள் விதித்திருந்த காலக்கெடு முடிவடைவதற்கு சில மணிநேரங்களின்முன்பாக ஈராக் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தது.

ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபைக்கு ஊடாக ஜேர்மன், பிரிட்டன், அமெரிக்கா பிரான்ஸ்,ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டாக தயாரித்த எச்சரிக்கை வாசகம் ஈராக்கிடம் வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த தடை செய்யப்பட்ட பிரதேசத்தினுள்கடந்தவாரத்தில் ஒரு ஈராக்கிய விமானம் அமெரிக்க படைகளால்சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

# இந்தியாவுக்கு விஜயம்

(டில்லி)

ரஷ்ய ஜனாதிபதிபொறிஸ் யெல்சின் மூன்று நாள் அரசமுறைப் பயணமொன்றை மேற்கொண்டு இந்த மாதம் 27 ஆம் திகதியன்று புதுடில்லி வருகிறார்.

இந்தப் பயணத்தின்போது பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும்எனத் தெரிவிக்கப்படுகிறது

# பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் ஆலயம் இருந்ததா?

பாபர் மசூதி - இராமர் ஜன்ம பூமி விவகாரத்தில் சர்ச்சைக்குரிய கட்டடம் இருந்த பகுதியில் இந்து சமய ஆலயம் அல்லது ராமர் ஆலயம் இருந்ததா என்ற கருத்தை தெளிவுபடுத்துமாறு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா உச்ச நீதிமன்றத்தை கேட்டுள்ளார். இந்திய அரசியலமைப்பின் 143-வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் இக்கோரிக்கையை விடுத்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இதேவேளை சர்ச்சைக்குரிய இப்பகுதியை மத்திய அரசுபொறுப்பேற்றுள்ளது

# மடுறோட்டில் தற்காலிக குடியேற்றத் திட்டம்

மன்னார் மாவட்டத்தில் இராணுவநடவடிக்கையினால் இடம் பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் 350 ... மன்னார் மடுறோட் என்னும் இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக 3-1-93 இல் ... ஏக்கர் திட்டமாகவும் ஒரு வீடு கட்டப்படுவதற்கு தலா 4000 ரூபா வீதம் வழங்கப்படுமெனவும் இங்கு குடிநீர் வசதி, மரு...

### காங்கிரஸ் எம். பிக்கள் கண்டனம்

(டில்லி)

மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அண்மையில் கல்கத்தா நகரில் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதை இந்திரா காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள்

புதுடில்லியில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் இந்தச் சம்பவம் குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என்றும் கேட்டுள்ளார்கள்.

# ராவ் தடுக்கப்படுவார்

சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள டாக்கா வரும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் விமான நிலையத்தில் வைத்து தடுத்து வைக்கப்படுவார் என பங்களாதேஷின் தீவிர சமய அடிப்படைவாதிகள் மிரட்டல் விட்டுள்ளனர்.

அயோத்தி பிரச்சினை தொடர்பாக தங்களது நெடும் பயணத்தைக் கைவிட்ட பின்னர் நடத்திய கூட்டம் ஒன்றில் பாரதத்துடன் ராஜீய உறவுகளை நிறுத்திக் கொள்வது உட்பட தமது ஏழு அம்சக் கோரிக்கைகளையும் அறிவித்துள்ளனர்.

தென்காசிய ஒத்துழைப்பு சங்கம் சார்க்கின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரசிம்மராவ் அடுத்த வாரம் டாக்கா செல்ல விருப்பது தெரிந்ததே. அவ்வேளையே விமான நிலையத்தை முற்றுகையிட்டு அங்கு அவரை தடுப்பதென இச்சமய அடிப்படைவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

### கருத்தரங்கு

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டின் கீழ் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு எயிட்ஸ் நோயின் பாதிப்பும், பாதுகாப்பும் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கை வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் நடத்தவுள்ளார். அத்...

திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடை செய்யப்பட்ட பிரதேசமாக சிறிலங்கா ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். இதன் பிரகாரம் யாழ். கடல் நீரேரியில் மீன்பிடிப்பதோ, அன்றிப் பயணம் செய்வதோ சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறி யாழ். கடல் நீரேரிப் பகுதியில், செல்லும் படகுகள் மீது சிறிலங்கா ஆயுதப்படையினர் நடவடிக்கை எடுப்பதற்கு இவ் அறிவிப்பு அனுமதி வழங்கியுள்ளது எனலாம்.

அண்மையில், கிளாலிக்கடற்பரப்பில் அப்பாவித் தமிழ்மக்கள் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து எழுந்த கண்டனங்களை அடுத்தே சிங்கள அரசாங்கம் இப் பிரகடனத்தை செய்ததாகத் தெரிகிறது.

சிங்களப் பேரினவாதம் புரிந்த இனப்படுகொலைகளின் பட்டியல் தொடர்ந்தும் நீண்டு கொண்டே செல்கின்றது. இப்படுகொலைகளில் பெரும்பாலானவற்றிற்கு விசாரணை கிடையாது. ஒரு சிலவற்றிற்கு விசாரணைகள் நடைபெற்றன. விசாரணைகளும் கொலைக்குக்காரணம் தேடுபவையாகவே இருந்தன. விசாரணையின் முடிவுகள் காரணங்களையும் கண்டு பிடித்தன. உணர்ச்சி வசப்பட்ட நிலை, சூரியஒளியினால் ஏற்பட்ட தாக்கம், புத்திசுவாதியீனம் என்பன கண்டுபிடிக்கப்பட்ட காரணங்களில் சில. இந்நிலையில், தமிழர்படுகொலைகள் குறித்த விசாரணைக்கமிசன் என்பது ஒரு வேடிக்கையான தொன்றாகவே உள்ளது. இதனால், தமிழ் மக்கள் விசாரணைக்கமிசன் மூலம், தமக்கு நீதிகிட்டும் என்ற நம்பிக்கையைக்கொண்டிருக்கவில்லை.

இந்நிலையில் கிளாலிப் படகு படுகொலை தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்கள் 'தமது பங்கிற்கு' விசாரணைக் கமிசன் வேண்டும் என ஒரு கோரிக்கையைவிடுத்தனர். ஆனால், அரசாங்கமோ, இனி கொலைகளுக்கான காரணம் தேடுவது சிரமம் என்ற அடிப்படையில் சட்டத்தின் மூலமே யாழ்ப்பாணக் கடல்நீரேரியைத் தடை செய்துவிட்டது அரசாங்கத்தின் இந்நடவடிக்கை விசாரணைக் கமிசன் கோரிய தமிழ்க்குழுக்களுக்குப் பதிலடியாகவும் உள்ளது.

இச்சட்டத்தின் மூலம் யாழ். கடல் நீரேரிப் பகுதியில் தமிழரைக் கொல்ல சிறிலங்கா ஆயுதப் படையினருக்கு சிங்கள அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது. அதாவது, யாழ். கடல் நீரேரியை ஓர் கொல்லும் களமாக இவ் அறிவிப்பு மாற்றியுள்ளது. அத்தோடு கொல்லப்பட்டதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பிலிருந்தும் தப்பிக் கொள்கின்றது. மேலும் தமிழ் மக்கள் மீது பொருளாதார இராணுவ அழுத்தத்தையும் பிரயோகிக்க முற்படுகின்றது.

ஆனால் சிங்கள பேரினவாதத்தின் இந்நடவடிக்கையானது தமிழ் மக்களுக்கு ஆச்சரியமூட்டக் கூடியதொன்றல்ல. தமிழ் மக்களை எவ்வெவ் வழிகளில் அடக்கி ஒடுக்க முடியுமோ அவ்வழிகளை எல்லாம் தயவுதாட்சனியம் இன்றி சிங்கள அரசாங்கம்கடைப்பிடிக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். ஆனால் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு இது பெரும் ஏமாற்றமாகும். விசாரணை கோரினால் தடை அறிவிப்பு வருவது என்பது அவர்களைப் பொறுத்து அதிர்ச்சியான தொன்று தான்.

---

கை 35ஐ எட்டியுள்ளது என்று மருத்துவ மனையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன

துவக்கப்பட்டது தொடர்பாக நடைபெற்ற கலவரங்களில் பம்பாயில் 200க்கு அதிக பது பேர் கொல்லப்பட்டனர். தலைநகரின் பல பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயணத்தைக் கைவிட்ட பின்னர் நடத்திய கூட்டம் ஒன்றில் பாரதத்துடன் ராஜீய உறவுகளை நிறுத்திக் கொள்வது உட்பட தமது ஏழு அம்சக் கோரிக்கைகளையும் அறிவித்துள்ளனர்.

## மிரட்டல்களுக்கு அஞ்சோம் யுத்தம் நடத்தத் தயார்

### ஈராக் அறிவிப்பு

(பாக்தாத்)

மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம் யுத்தம் நடத்த தயாராக இருக்கின்றோம் எனவும் ஈராக் மேற்கு நாடுகளை எச்சரித்துள்ளது. அது மேலும் கூறுகையில்; ஈராக்கின் தென்பகுதியிலிருந்து விமான எதிர்ப்பு ஏவுகணைகள் மீளப் பெறப்பட மாட்டாது எனவும், தாக்குதல் நடத்தப்பட்டால் பதிலடி தரப்படும் எனவும், ஈராக்கின் பிரதிப் பிரதமரான தாரிக் அஸீஸ் அவசர அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் ஈராக்கின் தென் பகுதியிலிருந்து விமான எதிர்ப்பு ஏவுகணைகள்மீளப்பெறப்படவேண்டுமெனவும் அதற்கு நாற்பத்தியெட்டு மணிநேர காலக்கெடு விதிப்பதாகவும் மேற்கு நாடுகள் விதித்திருந்த காலக்கெடு முடிவடைவதற்கு சில மணிநேரங்களுமுன்பாக ஈராக் இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தது.

ஐக்கியநாடுகள்பாதுகாப்புச் சபைக்கு ஊடாக ஜேர்மன், பிரிட்டன், அமெரிக்கா பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டாக தயாரித்த எச்சரிக்கை வாசகம் ஈராக்கிடம் வழங்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த தடை செய்யப்பட்ட பிரதேசத்தினுள்கடந்தவாரத்தில் ஒரு ஈராக்கிய விமானம் அமெரிக்க படைகளால்சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது

## இந்தியாவுக்கு விஜயம்

(டில்லி)

ரஷ்ய ஜனாதிபதிபொறிஸ் யெல்சின் மூன்று நாள் அரசமுறைப் பயணமொன்றை மேற்கொண்டு இந்த மாதம் 27 ஆம் திகதியன்று புதுடில்லி வருகிறார்.

இந்தப் பயணத்தின்போது பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகும்எனத் தெரிவிக்கப்படுகிறது

தெற்காசிய ஒத்துழைப்பு சங்கம் சார்க்கின்உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரசிம்மராவ் அடுத்த வாரம் டாக்கா செல்ல விருப்பது தெரிந்ததே. அவ்வேளையே விமான நிலையத்தை முற்றுகையிட்டு அங்கு அவரை தடுப்பதென இச் சமய அடிப்படைவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

## பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் ஆலயம் இருந்ததா?

பாபர் மசூதி - இராமர் ஜன்ம பூமி விவகாரத்தில் சர்ச்சைக்குரிய கட்டடம் இருந்த பகுதியில் இந்து சமய ஆலயம் அல்லது ராமர் ஆலயம் இருந்ததா என்ற கருத்தை தெளிவுபடுத்துமாறு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா உச்ச நீதி மன்றத்தை கேட்டுள்ளார். இந்திய அரசியலமைப்பின் 143-வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் இக் கோரிக்கையை விடுத்திருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இதேவேளை சர்ச்சைக்குரிய இப்பகுதியை மத்திய அரசுபொறுப்பேற்றுள்ளது

## மடுறோட்டில் தற்காலிக குடியேற்றத் திட்டம்

மன்னார் மாவட்டத்தில் இராணுவநடவடிக்கையினால் இடம் பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் 350 குடும்பங்களுக்கு குடியேற்றத் திட்டம் ஒன்றினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொள்ள இருக்கிறது. இத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக 50 குடும்பங்களுக்கு மன்னார் மடுறோட் என்னும் இடத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக 3-1-93 இல் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில், இடம் பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் மக்கள் சுயமான ஒரு முயற்சியில் ஈடுபடும் பொருட்டு இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதெனவும் இது அரை ஏக்கர் திட்டமாகவும் ஒரு வீடு கட்டப்படுவதற்கு தலா 4000 ரூபா வீதம் வழங்கப்படுமெனவும் இங்கு குடிநீர் வசதி, மருத்துவ வசதி, பாலர் பாடசாலை போன்றனவும் அமைத்துத் தருவதாகவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மன்னார் கிளை அலுவலர் திரு. பொற்கோ அவர்கள் தெரிவித்தார்.

## முல்லை மாவட்டத்தில் வீடமைப்பு உதவி

(யாழ்ப்பாணம்)

தேசியவீடமைப்பு திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம். 5.7 மில்லியன் ரூபாவை வீடமைப்புக்கான மானியமாக வழங்கியிருப்பதாக மாவட்ட முகாமையாளர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் வறுமையிலும், வறுமையாக வாழும் சுமார் அறுபத்தேழு குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம்ரூபா வீதம்மூன்றுலட்சத்து அறுபதினாயிரம் ரூபா வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்..

## அரிசி, மா, சீனிக்கு கூ.சங்கம் விலை நிர்ணயம்

பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் அரசாங்க அதிபரிடம் பணம் கொடுத்துகொள்வனவு செய்யும் பொருள்கள் பின்வரும் விலைகளில் விற்கப்பட வேண்டுமென கடந்த 7ந்திகதி கூடிய ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள் பொது முகாமையாளர்கள் மாநாடு முடிவுசெய்துள்ளது. இதன்படி கோறா அரிசி கிலோ வொன்று ரூபா 22.50 ஆகவும், வெள்ளைப் பச்சை அரிசி, கிலோ ரூ. 21 50 ஆகவும், சீனி கிலோ வொன்று ரூ. 31.50 ஆகவும். மா கிலோ வொன்று ரூ. 17.00 ஆகவும் விற்கப்படவுள்ளது.

## கிளை திறப்பு

அரியாலை சாம்சன், மணியரசன், டயஸ் ஆகிய குடியிருப்புக்களை உள்ளடக்கிய நாவலடி முகாம், நாவற்குழி லவனிதா குடியிருப்பு ஆகிய இரு முகாம்களிலும் வசிக்கும் திவக மக்களுக்கான இலவச நிவாரண உலர் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கென ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இவ்விரு முகாம்களிலும் ஒவ்வொரு கிளைகள் திறக்கப்பட்டுள்ளன. 6 ஆம் திகதி புதன்கிழமை இக்கிளைகளின் திறப்பு விழா விமரிசையாக நடைபெற்றது. அரியாலை முகாமில் உள்ள கிளையை அம்முகாமின் பொறுப்பாளர் திரு. சுபாஸ்கும், நாவற்குழி முகாமில் உள்ள கிளையை அம்முகாமின் பொறுப்பாளர் தேவனும் திறந்து வைத்தார்கள்

## கருத்தரங்கு

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டின் கீழ் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்று முப்பது மணிக்கு எயிட்ஸ்நோயின் பாதிப்பும், பாதுகாப்பும் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடத்தப்படவுள்ளது. இக்கருத்தரங்கை வைத்திய கலாநிதி தெய்வேந்திரன் நடத்தவுள்ளார், அத்துடன் எயிட்ஸ் நோய் பற்றிய வீடியோப் படக்காட்சியும் நடத்தப்படவுள்ளது.

## பயிற்சி வகுப்பு

வலிகாமம் வடக்குப் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்தினர் தொண்டர்களை சேர்த்துக் கொள்ளத்திட்டமிட்டுள்ளனர் எனவே வலிகாமம் வடக்குப் பிரிவில் தொண்டர்களாகச் சேரவிரும்பும் சேவை மனப்பாங்குடைய இளைஞர்கள் எதிர்வரும் 15-ந் திகதி மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில்நடைபெறவுள்ள முதலுதவி பயிற்சி வகுப்புகளுக்கு தமது விண்ணப்பங்களுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## கருத்தரங்கு

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேசசபைகளால் நடாத்தப்பட்டு வருகின்ற சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றி வருகின்ற வைத்தியர்களுக்கிடையிலான கருத்தரங்கொன்று யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

# எமது இராணுவத்தின் மீது அரசுக்கு நம்பிக்கை இல்லை

**—காமினி திசாநாயக்கா**

அரசாங்கத்திற்கு எமது இராணுவத்தின் மீது நம்பிக்கை இல்லை எனவே தான் டெலோவில் உள்ளவர்களை விலைக்கு வாங்கி உயர் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கின்றார்கள் என ஜனநாயகஐக்கிய முன்னணித் தலைவர்களில் ஒருவரான காமினி திசாநாயக்காஅக்குரஸ்ஸவில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கத்தின் இந்த நம்பிக்கை இழந்த நிலை பாதுகாப்பு படையினரின் மனதில் உளவியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆடைத் தொழிற்சாலைகளினால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாக பாதிப்படையும். ஜனாதிபதிக்கு நாட்டின் பொருளாதாரத்தில் அக்கறையில்லை. மக்களின் வாக்கு பெறும் நோக்கத்துடனேயே அவரின் செயல்பாடுகள் உள்ளது என்றார்.

1992-ம் ஆண்டில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்று அரசாங்கம் கூறியது ஆனால் தொடர்ந்து யுத்தம் நடந்து கொண்டு தான் உள்ளது. யுத்தத்தை இந்த அரசாங்கத்தினால் முடிவுக்கு கொண்டு வரமுடியாது என ஜனநாயக ஐக்கியமுன்னணியின் மற்றும ஒரு தலைவரான லலித் அத்துலத் முதலி தெரிவித்தார். நான் பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் 738 படையினரே பலியானார்கள், ஆனால் 1992-ம் ஆண்டு மட்டும் இராணுவத்தில் 1043 பேர் பலியாகியுள்ளனர். எமது இளைஞர் வீணாக பலியாகின்றார்கள். எமது ஆயுதத்தினால் நாம் பலியாக வேண்டியுள்ளது என்றார். எனவே மிக விரைவில் மக்கள் அரசுக்கு எதிராக அணிதிரள வேண்டும் அந்தநாள் வெகுதொலைவில் இல்லை என்றார்.

## வேலணை ம. வித்தியாலயம் விரைவில் இடம் மாறும்

[வேலணை]

சிறிலங்கா இராணுவ நடவடிக்கையால் வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தைப் புதிய சூழலுக்கு மாற்றுவதற்கு கல்லூரி பழைய மாணவ சங்கத்தினரும் கல்லூரியின் அபிவிருத்தி சபையினரும் நடவடிக்கையினை எடுத்துக் கொண்டதற்கு அமைவாக யாழ் அரசடி வீதியில் காணியொன்று பெறப்பட்டுள்ளது

இவ்வாறு பெறப்பட்ட காணியில் கல்லூரியை செயற்படுத்துவதற்காகவும் அரசாங்க புனர்வாழ்வுப் பகுதியினரால் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளரும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளருமான திரு. க. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை பொங்கல் திருநாளுடன் இக்கல்லூரி புதுப் பொலிவுடன் புதிய இடத்தில் இயங்குவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.


### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

## வேண்டுகோள்

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் பொருளாதாரத் தடையைக் கண்டித்தும், மற்றும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து யாழ் மாவட்ட வெகுஜன அமைப்பினால் நாளை காலை 10 00 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து யாழ் செயலகம் வரை நடாத்தப்படும் ஊர்வலத்தில் சகல அதிபர்களும், ஆசிரியர்களும் பங்குபறறி கல்விச் சமூகத்தின் பலத்த ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

த. மகாசிவம்
பொதுச்செயலாளர்
இ.த.ஆ. சங்கம்

[3974]


## மரண அறிவித்தல்

### தம்பையா செல்லத்துரை

(கட்டுவன் பல நோ. கூ. ச. முகாமையாளர்)

கட்டுவனை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய தம்பையா செல்லத்துரை (கட்டுவன் பல நோ. கூ. ச. முகாமையாளர்) அவர்கள் 09-01-1993 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், புஸ்பநாதன் (சுவிஸ்), புஸ்பமலர் (மணி), புஸ்பகாந்தன் (சுவிஸ்), புஸ்பமாலா (கனடா), புஸ்பரஞ்சினி (கனடா), புஸ்டசிதா லக்ஷ்மி (சுவிஸ், புஸ்பரகுநாதன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், தயானந்தசோதி, லோகேஸ்வரன் (டண்), ஜெயராணி, இராஜேஸ்வரன், ஜெய

### மாபெரும்

இவ்வாறு அணிதிரண்டு வரும் மக்கள் நாளை காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்னால் கூடுவர். காலை 10.00 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு கோவில் வீதியூடாகச் சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலும், யாழ். செயலகத்திலும் கண்டன மகஜர் கையளிக்கப்படவுள்ளது. யாழ். செயலகத்தின்முன் மறியற்போராட்டமும் நடைபெறவுள்ளது.

இக் கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ மக்களுக்கு அழைப்பு விடுத்து சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

“தமிழீழ மக்களின் குரல்

### பிற்போடப்பட்டது

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று நடைபெறவிருந்த, குழந்தை சண்முகலிங்கத்தினால் தயாரித்து வழங்கப்படும் ‘உறவுகள்’ எனும் நாடகம் எதிர்வரும் செவ்வாய் மாலை 4.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

### திருச்சபை

நடத்தியுள்ளார்.

அங்கிலிக்கன் திருச்சபை ஆயரின் விஜயத்தின் நோக்கங்களில் ஒன்றான சர்வமதத் தலைவர்களை சந்திக்கும் நடவடிக்கையின் கீழ் இது இடம் பெற்றதாகவும், நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக பேசப்பட்டதாகவும் உத்தியோகப் பற்றற்ற செய்திகள் தெரிவிக்கின்றன

### பரீட்சை

கப்பட்ட போதிலும் தபால் பொதிகள் திருக்கோணமலையில் வைத்து பாரப்படுத்தப்பட்டுள்ள விடைத்தாள்கள் இக்கப்பல் கொழும்புக்கு மீண்டும் செல்லும் போது பாரபளிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் புதன் கிழமையளவில் இக்கப்பல் மீண்டும் திரும்பிச் செல்லும் போது யாழ் அவசர நோயாளிகள் சிலரையும் ஏற்றிச் செல்லக் கூடுமென தெரியவருகிறது.

### வவுனியா

புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

இதேவேளை மடுக்கந்தை இராணுவ முகாமிலிருந்து பொதுமக்கள்வாழும் குடியிருப்புக்களை நோக்கிப் பரவலான ஆட்லறி எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் பெருமாள் அருளானந்தம்(வயது 22, பன்றிக்கெய்தகுளம், ஓமந்தை) என்ற பொதுமகன் பலியானார்.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தினர் சின்னக்குளம் சந்தியில் தரித்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### சார்க்

இதனையடுத்து சிறிலங்கா ஜனாதிபதியின் டாக்கா விஜயம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது எனினும் இந்தியாவிற்குச் சென்று புத்தகாயாவையும் தங்கவேலியையும் தரிசிப்பார்

ஏழாவது சார்க் உச்சிமாநாட்டில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கலந்துகொள்ள முடியாததன் காரணத்தை நேரடியாக சிறிலங்கா ஜனாதிபதிக்கு விளக்குவதற்கென இந்திய வெளியுறவு துணை அமைச்சர் எட்வாட்டோ பெலேரோ இன்று கொழும்பு

## உணவு உதவி நிறுவனம் உதவிகளை வழங்கும்

வடக்குக் கிழக்கு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி முகாம்களில் வசிக்கும் அறுபதினாயிரம் அகதிகளுக்கு அவசர நிவாரண உதவிகளை ஐக்கியநாடுகள் உணவு உதவி நிறுவனம் வழங்கும் என தெரியவந்துள்ளது.

இந் நிறுவனம் 5000 மெற்றிக்தொன் அரிசி, சீனி, தானிய வகைகள் ஆகியவற்றை ஆறு மாதங்களிற்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கும் என தெரியவருகின்றது.

### பிரேமாவின்

பதியின் திட்டமும், ஏழைகளுக்குஉதவிவழங்கும்திட்டமும் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி வருகின்றன. எதிர்க்கட்சிகள் இவையெல்லாம் வீண் விரையம் என்றும் கண்டித்து வருகின்றன.

மேலும் ஜனாதிபதி அனைத்துத் தொழில்களையும் தனியார்துறைக்கு மாற்றி அமைப்பதன் மூலம் நாட்டை வெளிநாட்டவர்களுக்கு விற்கப் பார்க்கிறார் என்றும் எதிர்க்கட்சிகள் கண்டிக்கின்றன

இலங்கையில் மாபெரும் பிரச்சினை இப்போது நடைபெறும் இனப் போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது என்பதுதான். ஆனால்ஜனாதிபதியோ தனது பொருளாதாரக் கொள்கையைப் பற்றி விவாதிக்க மாத்திரம் தான் அறை கூவல் விட்டுள்ளார். என்பது குறிப்பிடத் தக்கது. நாட்டின் பிரதான அரசியல் தலைவர்கள் பகிரங்க மேடையில் சந்திக்கும் போது நாட்டைக் குலுக்கும் முக்கிய பிரச்சினையான இனப் பிரச்சினை நிகழ்ச்சி நிரலில் இல்லை என்றால் எப்படி? என்று பி. பி. ஸி கேள்வி எழுப்புகிறது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு வயது 75 ஆகி விட்டது. இப்படி வயதான காலத்தில் அவரால் விவாத மேடையில் தாக்குப் பிடிக்க இயலுமா? என்பது ஒரு கேள்விக்குறி என்று பி பி. ஸி. சந்தேகம் தெரிவித்திருக்கின்றது.


## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

4ı1/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

O/L DAY CLASS

| | | |
|---|---|---|
| கணிதம் | : | பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | : | இரா. செல்வவடிவேல் |
| | | J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி | : | K. S. முத்துலிங்கம் |
| தமிழ்-சமயம் | : | கோ. இராஜலிங்கம் |
| ஆங்கிலம் | : | மனோரஞ்சன் |
| வர்த்தகம் | : | விக்கி |

★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்.

★★ கணிதம் வாரத்தில் 6 மணி நேரமும் விஞ்ஞானம் வாரத்தில் 4 மணி நேரமும் நடைபெறும்

**ஆரம்பம்:**

**12-01-93 செவ்வாய் 8.00மணி**

(சி-5752)

தில் ஆக்கறையில்லை. மக்க ளின் வாக்கு பெறும் நோக்கத் துடனேயே அவரின் செயல் பாடுகள் உள்ளது என்றார்.

வித்தியாலயத்தில் தற்காலிக மாக இயங்கி வரும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச் சாமி மத்திய மகாவித்தியால யத்தினை எடுத்துக் கொண்ட தற்கு அமைவாக யாழ் அர சடி வீதியில் காணியொன்று பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட காணியில் கல்லூரியை செயற் படுத்துவதற்காகவும் அர சாங்க புனர்வாழ்வுப் பகுதி யினரால் நிதியும் ஒதுக்கப்பட் டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப் பாளரும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளரு மான திரு. க. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை பொங்கல் திருநாளுடன் இக்கல்லூரி புதுப் பொலிவுடன் புதிய இடத்தில் இயங்குவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப் படுவதாகவும் அவர் தெரிவித் தார்.

---

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்

# வேண்டுகோள்

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் பொருளாதாரத் தடையைக் கண்டித்தும், மற்றும் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து யாழ் மாவட்ட வெகுஜன அமைப்பினால் நாளை காலை 10 00 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து யாழ் செயல கம் வரை நடாத்தப்படும் ஊர்வலத்தில் சகல அதிபர் களும், ஆசிரியர்களும் பங்குபற்றி கல்விச் சமூகத்தின் பலத்த ஆதரவை வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

த. மகாசிவம்
பொதுச்செயலாளர்
இ.த.ஆ. சங்கம்

[3974]

---

# மரண அறிவித்தல்

## தம்பையா செல்லத்துரை

(கட்டுவன் பல நோ. கூ. ச. முகாமையாளர்)

கட்டுவனை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கில் வசித்தவரு மாகிய தம்பையா செல்லத்துரை (கட்டுவன் பல நோ. கூ. ச. முகாமையாளர்) அவர்கள் 09-01-1993 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், புஸ்ப நாதன் (சுவிஸ்), புஸ்பமலர் (மணி), புஸ்பகாந்தன் (சுவிஸ்), புஸ்பமாலா (கனடா), புஸ்பரஞ்சினி (கனடா), புஸ்டசீதா லக்ஷ்மி (சுவிஸ்), புஸ்பரகுநாதன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், தயானந்தசோதி, லோகேஸ் வரன் (டண்), ஜெயராணி, இராஜேஸ்வரன், ஜெய சிங்கம், சகுந்தலாதேவி (யாழ். பல்கலைக்கழகம்), ஆகி யோரின் மாமனாரும், சாயிராம, தனுஷா, சர்மிளா, ரமேஸ், ஜெனித்தா, கஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று 10-01-93 காலை 12.00 மணியளவில் கொக்குவில் மயானத்தில் நடை பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (3977)

தகவல்
[ மருமகன் ]
லோகேஸ்வரன் (டண்)

---

# கண்ணீர் அஞ்சலி

2-1-93 இல் கிளாலியில் நடந்த படுகொலை களின்போது சிக்கி தன் இன்னுயிரை இழந்த புதுக்குடியிருப்பை சேர்ந்த சிறி துர்க்கா பார்மசி உரிமையாளர் திரு. இ. சுரேசுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாதன் மருந்தகம்
பருத்தித்துறை வீதி
கல்வியங்காடு
(3975)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

### மாபெரும்

இவ்வாறு அணிதிரண்டு வரும் மக்கள் நாளை காலை நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தின் முன்னால் கூடுவர். காலை 10.00 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டு கோவில் வீதியூடாகச் சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலும், யாழ். செயலகத்திலும் கண் டன மகஜர் கையளிக்கப்பட வுள்ளது. யாழ். செயலகத் தின்முன் மறியற்போராட் டமும் நடைபெறவுள்ளது.

இக் கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு தமி ழீழ மக்களுக்கு அழைப்பு விடுத்து சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் வெளி யிடப்பட்டுள்ளன.

''தமிழீழ மக்களின் குரல் வளையை நெரிக்கும் கொடூர சிறிலங்கா அரசின் கொடுமை யைத் தட்டிக்கேட்க காலம் களம் அமைத்து தந்திருக்கி றது.''

''எமது இருப்பை, வாழ் நிலையை நாமே தீர்மானிக் கும் வரலாற்றுக் கட்டத்தை அண்மித்து விட்டோம்'' போன்ற பல கோசங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரம் ஒன்றை தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள . (க)

---

### 96 சதவீத

மக்களுக்கு இந்நோய் பரவும் தொற்றும் அபாயம் உள்ளது இதனை உலக வங்கியின் வெளியீடான ஆசியாவில் சுகா தார சேவை என்ற நூல் சுட் டிக்காட்டுகின்றது.

ஆசிய நாடுகளில் ஏழைக ளுக்கு சுகாதார வசதிகள் வழங்கும் விடயத்தில் மேலும் முன்னேற்றத்திற்கு இடமுண்டு என்று நூலாசிரியர் சாள்ஸ் கிரிபஸ் தெரிவிக்கிறார். ஆசிய நாட்டு அரசுகள் பொதுச் சுகாதாரத்துக்குப் போதிய பணம் செலவிடுவதில்லை என்றும் கஷ்டப் பிரதேச சுகா தார சேவைகள் சம்பந்தமா கச்செலவிடப்படும்பணம்மிகக் குறைவு என்றும் அந் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

மீண்டும் செல்லும் போது பாரபளிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் புதன் கிழமை யளவில் இக்கப்பல் மீண்டும் திரும்பிச் செல்லும் போது யாழ் அவசர நோயாளிகள் சிலரையும் ஏற்றிச் செல்லக் கூடுமென தெரியவருகிறது.

---

### வவுனியா

புலிகள் தரப்பில் சேதம் எது வும் இல்லை.

இதேவேளை மடுக்கந்தை இராணுவமுகாமிலிருந்து பொதுமக்கள்வாழும்குடியிருப் புக்களை நோக்கிப் பரவலான ஆட்லறி எறிகணைத் தாக்கு தல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் பெருமாள் அருணானந்தம்(வயது 22, பன் றிக்கெய்தகுளம், ஓமந்தை) என்ற பொதுமகன் பலியா னார்.

இதேவேளை சிறிலங்கா இராணுவத்தினர் சின்னக் குளம் சந்தியில் தரித்து நிற்ப தாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

### சார்க்

இதனையடுத்து சிறிலங்கா ஜனாதிபதியின் டாக்கா விஜ யம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது எனி னும் இந்தியாவிற்குச் சென்று புத்தகாயாவையும் தங்கவேலி யையும் தரிசிப்பார்

ஏழாவது சார்க் உச்சிமா நாட்டில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கலந்துகொள்ள முடியாததன் காரணத்தை நேரடியாக சிறிலங்கா ஜனாதி பதிக்கு விளக்குவதற்கென இந் திய வெளியுறவு துணை அமைச்சர் எட்வாாடோ பெலேரோ இன்று கொழும்பு வருவார் என தெரிவிக்கப்படு கிறது.

சார்க் உச்சி மாநாடு பின் போடப்படுவது இது இரண் டாவது முறையாகும். அயோத்தி பாபர் மசூதி இடிப் பைத் தொடர்ந்து பிரதமர் நரசிம்மராவ் முன்பு சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள முடியவில்லை. அதனால் முதல் முறையாக சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்போ தும் நரசிம்மராவ் பங்குபற்ற முடியாத நிலையில் மாநாடு இரண்டாவது முறையும் கால வரையின்றிப் பின்போ டப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டிற்கான புதிய திகதிகுறித்து இராஜ தந்திர வட்டாரங்களில் ஆரா யப்படுவதாக செய்திகள் தெரி விக்கின்றன.

---

### பேரணி

தில் உள்ள சகல அதிபர்களை யும், ஆசிரியர்களையும் காலை 9-00 மணிக்கு நல்லூரில் உள்ள சங்கப் பணிமனைக்கு முன் கூடுமாறும். இதுபற்றி ஆலோசிப்பதற்காக இன்று பி ப, 3-00 மணிக்கு தாய்ச் சங்க, மாவட்ட, கிளை நிர் வாகிகளை சங்கப் பணிமனை க்கு வருகை தருமாறும் அவர் கேட்டுள்ளார்.

---

முடிவுக்குக் கொண்டு வருவது என்பதுதான். ஆனால்ஜனாதி

பது ஒரு கேள்விக்குறி என்று பி.பி.ஸி. சந்தேகம் தெரி வித்திருக்கின்றது.

---

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

4,1/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

O/L DAY CLASS

| | | |
|---|---|---|
| கணிதம் | : | பாஸ்கரன் |
| விஞ்ஞானம் | : | இரா. செல்வவடிவேல் |
| | | J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி | : | K. S. முத்துலிங்கம் |
| தமிழ்-சமயம் | : | கோ. இராஜலிங்கம் |
| ஆங்கிலம் | : | மனோரஞ்சன் |
| வர்த்தகம் | : | விக்கி |

★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்.

★★ கணிதம் வாரத்தில் 6 மணி நேரமும் விஞ்ஞானம் வாரத்தில் 4 மணி நேரமும் நடைபெறும்

## ஆரம்பம்:

## 12-01-93 செவ்வாய் 8.00மணி

(சி-5752)

---

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 08.01.1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7589

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

40-2249, 22-3379, 26-4726, 41-8557, 28-9037,
26-4882, 21-9530, 24-9856, 41-2659, 27-4301,
26-6398, 40-2677, 27-9772, 41-9211, 27-5187,
26-9626, 24-5041, 26-2745, 27-7653, 24-4476,
26-6075, 24-1250, 42-9626, 40-0770

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-6527, 26-8382, 27-9136, 27-5907, 26-5782
24-9597, 26-2299, 26-6526, 27-8959, 42-0488,
42-2197, 41-9175, 24-6168, 26-7187, 24-5092,
42-4719, 22-3887, 26-0672, 26-4281, 24-4185,
26-2668, 26-7627, 24-1685, 24-4367, 26-6062,

## 09-01-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 7589

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-1019, 26-4393, 26-5281, 24-5509, 26-1741,
27-7740, 41-8626, 27-4920, 28-8367, 27-5823,
42-3239, 40-6979, 26-5563, 27-9105, 26-6796,
24-4207, 41-9997, 26 3068, 27-4070, 26-3633,
27-2020, 27-4023, 26-5493, 41-8252

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

எந்தவித வாகனங்களும் செல்லவில்லை